பதிவு எண்—M 5720.

உ

வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

428

முல்லைக் கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-5 குருதலம், மார்ப்பாக்கம்; விசய, புரட்டாசி; 16—10—53 தளிர்-55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 NOV 1963
MADRAS

நேயர்களுக்கு!

முல்லைக் கொடிக்கு இவ்விதழோடு ஐந்தாம் ஆண்டு நிறைவுறுகின்றது. குழந்தைப் பருவம் கடந்து பள்ளிப் பருவம் தொடங்குகின்றது.

இதுகாறும் குழந்தைத் தன்மைக்கேற்ப வளர்ந்த அதனை ஏற்றுப் போற்றிய நேயர்களுக்கும் எழுத்துக்களை உதவிய அறிஞர் அன்பர்களுக்கும் நன்றி உரியதாகும்.

இனி, முல்லைக் கொடி தன் கொள்கைக் கேற்ப முறையாக இந் நாட்டு உயர்வுக்கான மொழி கலை தொழில் அருள் பணி என்னும் ஐவகை வாழ்க்கைத் துறைகளிலும், கட்சிப் பற்றற்ற ஒரு நடுநிலைக் கருத்திதழாகவே படரும். தொடர்ந்து வெளிவந்து முடியவேண்டிய பகுதிகள் தவிர, அதன் மற்றைய எழுத்துக்கள் எல்லாம் குருகுலச் செய்திகளோடு நாட்டில் நிகழும் பல்வேறு செய்திகள்மேல் கருத்தாகச் சான்றாண்மைப் போக்கில் அவற்றைப் போற்றியும் மறுத்துமே வெளிவரும்.

எழுதுகின்ற அன்பர்களும் அறிஞர்களும் இனித் தம் எழுத்துக்களை இவ்வகையிலேயே சிறு சிறு கட்டுரைகளாக, கருத்தறிவிக்கும் துணுக்குகளாக, விறுவிறுப்பும் தூய்மையும் விரவிய செந்தமிழ் நடையில் பல்வேறு துறைகளிலும் எழுதியனுப்புதல் வேண்டும்.

நேயர்கள் தம் கையொப்பங்களை உடனே அனுப்பிவைப்பதோடு புதிய அன்பர்கள் பலரையும் கையொப்பக்காரர்களாகச் சேர்த்து ஊக்க மூட்டவேண்டும்.

நாட்டில் இன்று மலிந்துள்ள குழப்பங்களெல்லாம் தெளிந்து அமைதியும் பலதுறை முன்னேற்றமும் உண்டாக்கக் கூடிய முல்லை (தவம்--கற்பு) ஒழுக்கத்தில் மக்களை இருத்துவதற்குத் தமிழ் மணத்தோடு தளிர்த்து வரும் இம் முல்லைக்கொடியை ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் தக்கபடி படரவிட்டு நலம் கொண்டு, தாம் பாரியின் பரம்பரையினர் என்பதைப் புலப்படுத்திக் கொள்வார்களாக!

— ஆ.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ. 4	0	0
வெளி நாடு	ரூ. 6	0	0
தனித் தாள்	0.	1	0
ஆயுள்—			
கையொப்பம்	ரூ. 100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, புரட்டாசி,	தளிர்
5	16-10-53 வெள்ளி	55

ஆக்க நோக்கம்

இந்திய நாட்டிலேயே தமிழ் மக்கள் தாம் அறிவு, ஆராய்ச்சி, கலை, சீர்திருத்தம், உழைப்பு முதலிய பலதுறைகளில் மற்றவர்களைக் காட்டினும் முன்னிற்கிறார்கள் என்றும், ஆனால் வாழ்க்கை நிலையில் மட்டும் அவர்கள் அடித்தளத்திலேயே இருக்கிறார்கள் என்றும் சுற்றிப்பார்ப்பவர்கள் கூறுகிறார்கள்.

இக்கீழ் நிலைக்குக் காரணங்கள் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ காரணங்கள் புலப்படும். அடிப்படைக் காரணங்களை மட்டும் எண்ணிப்பார்ப்பது நல்லது. அவைகள் நீக்கப்பட்டால் மற்றவைகள் எளிதாக நீக்கப்படலாம்.

1. தமிழ் மக்களுக்குள் எவ்வளவோ நலங்கள் இருந்தாலும் 'ஒற்றுமை' என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அது வளரவேண்டும்.

2. தம்மவர்களுக்குள் தனிப்பட்டவர்களிடம் இருக்கும் நலங்களை விடக் குறைபாடுகளையே பெரிதாகப் பார்த்துப் புறங்கூறி ஒதுக்கும் புன்மை மிகுதியாக இருக்கிறது. அது ஒழிய வேண்டும்.

3. தம்மவர் என்கிற இனப்பற்றும், தம் நாடு தம் மொழி என்கிற உரிமை உணர்ச்சியும் இன்னும் தகுதியாக வளரவில்லை. அது வளரவேண்டும்.

4. தமிழ் நாட்டில் எத்தனையோ அமைப்புகளும், கட்சிகளும், இதழ்களும், தலைவர்களும், செல்வர்களும் இருந்தாலும் தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ்ச் சமயம், தமிழ்மக்கள் என்னும் இவற்றின் நலங்களையே பெரிதாக நினைத்து அவற்றைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்ட ஓர் அமைப்போ, கட்சியோ, இதழோ, தலைவரோ, செல்வரோ தகுதியான வகையில் அமையவில்லை. இனியேனும் அமைய வேண்டும்.

5 இக்குறைகள் எல்லாம் நீங்கத் தமிழ் மக்களுக்கு 'ஆக்க நோக்கம்' வேண்டும்.

ஆக்க நோக்கம் இருக்கிற இடத்தில் ஒற்றுமையும், வளர்ச்சிக்கு வேண்டிய பல்வகை நிலைகளும் தாமாகவே கால் கொள்ளத் தொடங்கிவிடும்.

வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவைகளை அழிப்பதில் கூட 'ஆக்க நோக்கம்'கொண்டு வேலை செய்யலாம்.

எதிர்ப்புகளைப் பெருந்தன்மையோடு செய்வதும், விளைவுகளை நன்றாக எண்ணிப் பார்த்து மறுப்புக்கு இடமில்லாதபடி இயற்கையாகவும் மாற்றாரும் பாராட்டும் முறையில் ஒற்றுமையாகவும் நல்வழியிலும் அவ்வெதிர்ப்புகளைச் செய்வதும் ஆக்க நோக்கத்தோடு செய்யும் எதிர்ப்புகளாக ஆகும்.

ஆக்க நோக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை. அது மட்டும் தக்கபடி இருந்து விட்டால் அதாவது அறத்தோடு கூடியதாக அமைந்து விட்டால் அமைய வேண்டிய எல்லா நலங்களும் தாமாகவே அமைந்து விடும்.

நம் தமிழ் நன் மக்களிடம் இவ்வாக்க நோக்கம் இருப்பதாகவே புலப்படவில்லை. எடுத்துக்காட்டாக, அண்மையில் தமிழ் மக்களிற் பல துறையினரும், கட்சியினரும் ஒருங்கு போற்றுமாறு பணியாற்றி மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுக்கு எங்கு பார்த்தாலும் எண்ணற்ற இரங்கற் கூட்டங்கள் நடைபெறுகின்றனவே ஒழிய, கூட்டம் நடத்துவாரிற் பெரும்பாலோர் அவர் பெயரால் அமைக்க ஏற்பாடாகியுள்ள மண்டபத்துக்குத் தம்மால் இயன்ற சிறு தொகைதானும் தொகுத்து அனுப்ப முயல்வதாகத் தெரியவில்லை

இப்படிக் குறிப்பிடுவதால் இரங்கற் கூட்டங்களே வேண்டாம் என்பதாக எண்ணிவிடக் கூடாது.

கூட்டம் கூடுவது பேசுவது இவற்றால் எல்லாம் உணர்ச்சிப் பெருக்கமும் உண்மை வளர்ச்சியும் ஓரளவு உண்டாகின்றதானாலும் உருவான பணிகளினால் தானே அவைகள் நிலையான பயனைச் செய்யும். எந்தச் செ

பணித்துறை:

அன்றுணர்ந்த நெஞ்சம் இன்று செயல்படும் அறிவு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் உணர்ந்தது தமிழ் நெஞ்சம். உணரும்படியான சூழ்நிலை அன்று அமைந்திருந்ததனால் அதை அகற்ற எண்ணிற்று. கடவுள் தன்மைக்கு—மனித நோக்கத்திற்கே புறம்பானவர்க்க பேதத்தைஎண்ணிக் கதறிற்று. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்றுணர்ந்த அந்நெஞ்சம் மனிதருக்குள் உண்டான ஏற்றத்தாழ்வுடைய பிளவு நிலையைக்கண்டு வெம்பிற்று—வெதும்பிற்று—கன்றிற்று. கடைசியாகக் கனன்றெழுந்து உதும்பிற்று.

"தெண்கடல் வளாகம்
பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய
ஒருமை யோற்கும்
நடுநாள் யாமத்தும் பகலும்
துஞ்சான்
கடுமாப் பார்க்கும்
கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை
இரண்" டென

உணர்ந்தது.

ஓர் இனம் உயர, பிறிதோரினம் தாழல் முறையன்றென முழங்கிற்று. சாதி சமயச்சழக்கெலாமற்றுச் சன்மார்க்க நெறி தவழ நீதி, நேர்மை நிதானம் ஓங்கி, நெடிய உலகம் மேம்பட வேண்டும்என்னும் எண்ணத்தால் பண்புற்ற மனித இனம் வேண்டுமெனப் பறை சாற்றிற்று.

இந்த உண்மையை உணர்ந்த நெஞ்சத்தின் உயிர்நாடி அன்றே சில உன்மத்தர்களால் அறுக்கப்பட்டது. உலகம் உய்யப் பாடுபட்ட உத்தமர்களின் நெஞ்சிலே நஞ்சைக் கலக்க நம் வஞ்சகர் முயன்றனர்.

அதனால் "பிச்சைஎடுக்கிறானே" என்று பரிதாபம் காட்டிய நெஞ்சம், அதே நோக்கில் தன்னாலானதை அவனுக்குச் செய்வோம் என்று செயல்படும் அறிவை இழந்தது. நெஞ்சம் உணர்ந்தது. அறிவு செயல்படவில்லை. அறிஞர் கூறினர். ஆக்கம் தேட யாரும் முன் வரவில்லை. எனவே உணர்ந்த அறிஞரோடு செயல் நின்று விட்டது. நாடு முழுதும் அறியவில்லை ஏன்? குறுகிய மனப்பான்மையினால் அறிவு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. ஏன் குறுகிய மனப்பான்மை ஏற்பட்டது? உலகை ஆண்டு அநுபவிக்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

வாய்ப்பளிப்பது யார்? வகையான அரசியல் முறை— அந்த அரசியல் ஏன் அளிக்கவில்லை? ஆட்சி சன் பார்க்கர்களிடமில்லை.

பல பேர் அறிஞர் சந்தர்ப்பம், சாகஸம் இவைகளால் இடர்ப்பாடுற்றனர். நீதி வஞ்சகரால் கவிழ்க்கப்பட்டது. உணர்வோடு நின்ற ஒருசிலநெஞ்சமும் செயல்படுமளவுக்கு அதிகாரம் பெறவில்லை.

ஆனால் இன்றோ, அறிவே ஆட்சிபெறமுனைகிறது உணர்ந்து உணர்த்தி, உறுதியாகச் செயலில் நின்று, கடமையை நிறைவேற்றப் பாடுபடுகிறது.

நாட்டின் சீர் கேடுகளுள்முக்கியமானது மனிதருள் பிறப்பு முறையில் பேதம்; நடை முறையில் ஏற்றத் தாழ்வெனக் கற்பிக்கப்பட்டு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடும் நிலையை அகற்றுவது கடமையெனக் கொள்கிறது அறிவு. அதற்கான புதுப்புதுத் திட்டங்களைத் தீவிரமாக அமுல் நடத்த முனைகிறது.

ஐயோ அறிவே! நீ இதனை அன்றே செய்யாத காரணத்தால், ஆயிரமாயிரம் ஏழை, எளியவர், ஏமாளிகள் இன்றுவரை மிகத் தாழ் நிலையில் இருந்து கொண்டுவருகின்றனர். உண்ண உணவற்று உடுக்க இடமற்று கையது கொண்டு மெய்யது பொத்திக்காலது கொண்டு உடல் தழுவிப்பேழையுளிருக்கும் பாம்பென முடங்கி மூச்சற்றுப் போய்இருக்கின்றனர். அடிமை, தாழ்ந்தவன், ஒதுக்கப்பட்டவன் என்றெல்லாம் நாட்டை இடுக்கணிலாழ்த்தி வரும் பழியை இன்று நீ எத்தனை திட்டங்கள் தீட்டி ஆத்ம பரிசுத்தம் தேட வேண்டியிருக்கிறது. ஆயினும் இத்'துரு'வைத்துடைக்கும் பணியில் இப்போதேனும் தீவிரமாக முனைந்தமைக்குப் பெரிதும் மகிழ வேண்டியதே.

—நாராயணசாமி.

லையும் உருவான ஆக்கப்பணியில் நாட்டம்வைத்துச்செய்ய வேண்டும் என்பதே ஈண்டுவற்புறுத்தப்படுகின்றது.

இனியேனும் தமிழர்கள் தம் செயல்கள் எல்லாவற்றையும் ஆக்க நோக்கத்தோடு செய்து உயர்வார்களாக!

ஒன்றாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு வேண்டுவது "ஆக்க நோக்கம்" "ஆக்க நோக்கமே!"

—தமிழ்ச் சிறுவன்.

மொழித் துறை:

தமிழர் கடன்!

(திருக்குறட் சொல்லடைவு நூலின் மதிப்புரை)

சான்றோன் சைவத் தமிழ்மணிநற்
சாமி வேலா யுதம்பிள்ளை
ஆன்று யர்ந்த திருக்குறளை
ஆய்ந்தாய்ந் தறிஞர் மிகவியப்பத்
தோன்றும் நல்ல சொல்லடைவாம்
தூய பெருநூல் தொடுத்தளித்தான்!
என்று 'செயற்கே அரியசெய்வார்
பெரியார்' எனும்சொற் கிலக்கானன்! (1)

* "நல்ல தொருநூல் என்பதுதான்
நன்றே அதன்றன் ஆசிரியன்
மல்லற் குருதி வாழ்வினுயர்
பிழிவாம்" என்றே வாய்மைமிகச்
சொல்லு கிறபர்! திருக்குறள்நற்
சொல்லின் அடைவு தனைஆய்வோர்
ஒல்லை அம்மெய் உணர்ந்துவியந்
துள்ளம் மயங்கி உவந்திடுவார்! (2)

சொற்கள் பிரித்துக் கணக்கெடுத்தும்,
அகர வரிசை சூழ்ந்தமைத்தும்,
மற்றும் அவற்றின் வான்முறையும்,
பகுதி விகுதி வகையமைப்பும்,
பொற்பும், பொருளும், இலக்கணமும்,
முன்பின் போதும் மாபுகளும்,
கற்றோர் வியப்பத் தொகுத்துணர்த்தும்
கலைநூல் இதன்சீர் கணிப்பரிதால்! (3)

அம்ம! அளவில் பலஇடுக்கண்
அடைந்தும், அரிதில் இவன்தொகுத்த
செம்மை ஒங்கு திருக்குறள்நற்
சொல்லின் அடைவாம் திருநூற்கு
மெய்ம்மை இணையாம் வேறொருநூல்
தமிழில் அணித்தே மேவியதில்!
பொய்ம்மை யன்று, வெறும்முகமன்
புகழ்ச்சி யன்று, பொருளுரையே! (4)

நல்ல அறிஞர் யாழ்ப்பாணம்
நடேசப் பிள்ளை, திரு. வி. க.,
சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளை,
தூய பெரியார் தணிகைமணி,

* "A good book is the precious life-blood of a master-spirit..."
——— John Miltan.

சிறுவர்க்கு:

நடராசன்

'நடராசன் எல்லார்க்கும் நல்லவனே நல்லவெலாம் செய வல்லவனே' இப்படி ஒருவன் பாடிக் கொண்டே சென்றான்.
யார் அவன்?

பண்டாரமா? — தவறு. பிச்சைக்காரனா? — கிடையாது. சன்னியாசியா?– தப்பு. பணக்காரனா?—இல்லை. பாடகனா?— அல்ல. பின் யார் அவன்?

செல்வத்திலே சிறந்து வாழ்ந்து, பின்பு அச் செல்வம் செல்வோம் என்று நீங்கிச் செல்ல, தன் மனைவியை இளமைக் காலத்தே இழந்து, சுற்றத்தாரும் கைவிடச் சுக வாழ்வு வாழ வழி தெரியாது, மனம் இறைவனை நாடியிருக்க, கால் கடற்கரையின் ஓரத்திலே செல்ல, நடந்துகொண்டிருக்கும் ஓர் அடியவர்தான் அவர்.

அவ்வடியார் பெயர்தான் நடராசன். நடராசனுக்குப் பிணி தொடங்கிற்று. நடராசன் மனைவி நாகவல்லி அவருக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்து வந்தாள். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருடன்" என்ற சொல்லுக்கிணங்க வாழ்ந்து வந்தாள். எனினும் நடராசன் உடல் ஒரு சிறிது அளவு கூட சுமாராகவில்லை. காலச் சக்கரம் ஓடிக்கொண்டே இருந்தது. கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து தேற்றப் பாடு பட்டாள். கணவன் தேறாமலே இருந்து வருவது கண்டு கவலை கொண்டாள். கவலை நோய் இவளைப் பற்றிற்று. இவள் நாளுக்கு நாள் மெலிந்து உருகிக் கடைசியில் இறந்தாள்.

வல்ல இராச மாணிக்கம்,
வரத ராசன், தெ. பொ. மீ.,
எல்லாப் பலநல் அறிஞர்களும்
இதனைப் போற்றிப் புகழ்ந்துளரால்! (5)

இணையில் இந்நூற் சிறப்புணர்ந்தே
இவ்வாண் டினிய தமிழ்வளர்ச்சிப்
பணிசெய் கழக ஆண்டுவிழா
பண்டைத் தில்லைத் தலைநகரில்,
அணியிற் பெருக நிகழ்ந்தபொழு
தரிய பரிசு வழங்கினர்கள்!
எனில், இப் பரிசோ? நூலோ? எஃ
துயர்ந்த தென்றே யாரறிவார்? (6)

உண்மைப் பெரியோன்! ஒழுக்கமிக்கோன்!
உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கையினன்!
எண்மைத் தோற்றம், சான்றாண்மை,
இணையில் அடக்கம், இறையடிக்கீழ்த்
திண்மைச் சிறப்பு மிகவாய்ந்த
அயரா அன்பின் திறமுடையோன்!
அண்மித் தொடர்வோர்க் ககம்மகிழ
அரிய உதவி பலபுரிவோன்! (7)

அரிய தமிழோ டாங்கிலமும்
ஆய்ந்து தெளிந்த பேரறிஞன்!
மருவு பழமை புதுமையெலாம்
வாய்ப்பப் போற்றும் மதிநலத்தான்!
உரிய நூல்கள் வல்லாரில்
உயர்ந்த சிறந்த நூல்வல்லான்!
பெரிய பள்ளி பலவற்றில்
தலைமை பிறங்கப் பணிபுரிந்தோன்! (8)

சிறந்த நல்ல பெரும் புலமைச்
செம்மல் ந. மு. வே. நாட்டார்,
அறந்தன் னுருவாம் தமிழவேள்
அண்ணல் உமாம கேசர்முதல்,
மறைந்தும் மறையாப் பெருஞ்சீர்த்தி
வாய்ந்த சான்றோர் பற்பலர்தம்
நிறைந்த அன்பும் பெருமதிப்பும்
நெருங்கு தொடர்பும மிகபபெற்றோன்! (9)

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கச்
சார்பில் தமிழ்க்கு, 'மொழியரசி'ச்
செஞ்சொற் கவிதை மலர்த்தொகுப்பைச்
சிறந்த முறையில் குறிப்புரையும்
எஞ்சற் கேதம் இலாதெழுதி
இனிது நன்றே பதித்தளித்தான்!
நெஞ்சுற் றிவன்றன் தொண்டுநன்மை
நினைந்து போற்றல் தமிழர்கடன்! (10)

—புலவர். முருகவேள் B. O. L.

அச்சமயத்தில் தான் சுற்றத்தவரும் மற்றவரும் வந்திருந்தனர். வீட்டிலிருந்த பணமும் வெல்லக் கட்டியைப் போல் கரைந்தன. ஏரியிலே தண்ணீர் நிரம்பத் தேங்கியிருப்பது போல் இருந்த பணம், கரை உடைந்ததுபோல் குறைய நேர்ந்தது. பணம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியதிலிருந்து இவன் உடல் நலம் சிறிது சிறிதாகத் தேற ஆரம்பித்தது. உடல் முழுமையும் தேறிற்று. பணம் ஒன்றும் இல்லாமலும் போயிற்று.

ஒவ்வொருவராக நடராசனை விட்டு நீங்கினர். இவனும் தான் யாது செய்வதென அறியாது தன் ஊரை விட்டு நீங்கினான். அவ்வாறு நீங்கியபோது தான் மேற் சொன்னவாறு பாடிச் சென்றான்.

அவனுக்கு ஒருநாள் போவது ஒரு மாதம் போவதுபோலிருந்தது. கண்டோர் யாவரும் அவன் நிலையைக் கண்டு சிரித்தனர். ஒருவரும் அவன் மேல் அன்பு கொள்ளவில்லை ஆம், கடைசியாக அவனும்பைத்தியமாகமாறினான்.

என்னே! ஒருவரின் வாழ்க்கையிலே ஏற்படும் மாறுதல்! நினைக்க ஒண்ணாத நிலையிலன்றோ ஏற்படுகின்றது! மேடு பள்ளமாகவும், பள்ளம் மேடாகவுமன்றோ மாறுகின்றது! ஆம், சிறந்த புகழுடன் செல்வச் சீமானாய் வாழ்ந்த அவன், சீரும் சிறப்பும் கெட்டுப் பிறர் சிரிக்கும் நிலையிலன்றோவாழ ஏற்பட்டுவிட்டது. நாள் என்றோ பொருள் என்றோ ஒன்றை உணர்ந்து வாழ முடியாத நிலையில் அவன் தலையெழுத்து மாறிவிட்டது.

ஓர் இரவு, ஒரு வீட்டில் உணவு கேட்டு, அதைக் கோவிலில்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அருள் துறை:

இருள் நீக்க எழுந்துள்ள இருபெருந் தலைவர்கள்

தமிழ் நாடுதெய்வத் திருநாடு! பழந் தமிழ்ப் பண்பாட்டின் பிழிவே அதன் பிற்காலச் சமய வாழ்வு!

தேவார திருவாசக முதலிய சைவத்திரு முறைகளையும், திருவாய்மொழி முதலிய திருநாலாயிரத் திரு மொழிகளையும் அடிப்படையாகக் கொண்ட சைவ வைணவ சமயங்கள் தமிழ்ச் சமயங்களே. இந்திய நாடு முழுதும் அவைகள் பரந்திருப்பினும் தென்னாட்டில் அவைகள் பெற்றுள்ள பெரு வளர்ச்சியே இதற்குச் சான்றாகும்.

காலப்போக்கில் சைவவைணவ வேற்றுமை மிகுதிப்பட்டுவிட்டதாயினும், அவைகள் ஒரே பண்பாட்டில் வளர்ந்த, அண்ணனும் தம்பியும் போன்ற அருமையுடையனவே.

நாட்டு மொழியல்லாதவேற்று (வட)மொழியும், நாட்டு (தமிழ்)க் கொள்கையல்லாத பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் தீண்டாமை முதலிய வேற்றுக்கொள்கைகளும் எப்படியோ அவற்றில் இடம் பெற்று விட்டன என்றாலும், இச்சமயங்கள் தமிழ்ப்பண்பாட்டின் சின்னங்களே, விளைவுகளே என்பதையும், அதனாலும் தமிழ்ப்பாடல்களைப் பெற்றதனாலுமே இவற்றின் நிலையங்கள் (திருக்கோயில்கள்) நூற்றுக்கணக்கில் பெருகி இந்நாட்டில் நிலைபெற்றுள்ளன என்பதையும் தமிழிளைஞர்கள் பலர் நன்கு ஆராய்ந்தறியாமல் இருக்கின்றனர்.

இந் நாட்டுச் சமயத் தலைவர்களும் இக்கருத்துக்களை நன்கு உணராமலும், இவற்றையும், நம் சமயத்தின் ஆழ்ந்தகன்றுயர்ந்த கொள்கைகளையும் மக்களுக்கு விளக்குவதில் தக்க கருத்துச் செலுத்தாமலும் இருந்துவருகின்றனர்.

சமய நிலையங்களாகிய திருக்கோயில்களும், திரு மடங்களும் வெறும் சடங்குகளுக்கும் மரபு (சம்பிரதாயம்)களுக்குமே இரையாகிவிட்டன. அவற்றால் பொது மக்களுக்கு அறிவு விளக்கமோ, வாழ்க்கை உதவிகளோ கிட்டாதாயின.

கல்விக்கும் கலைக்கும், காவியத்துக்கும் ஓவியத்துக்கும், இசைக்கும் கூத்துக்கும், இனிமைக்கும் அமைதிக்கும், அறத்துக்கும் முறைமை (நீதி)க்கும், அற்றார்க்கும் உற்றார்க்கும், நோயாளர்கட்கும் நோன்பினர்க்கும் புகலிடமாக இருந்த கோவில்கள் வெற்றாரவார விழாக்களுக்கும், மூடப் பழக்க வழக்கங்கட்கும், வீண் இடம்பக்காரர்களுக்கும், வேண்டாத பல நெறிகட்கும், நிலைகட்கும் இடமாய் விட்டன.

சமயத்தின் அடிப்படை நலங்களையோ கொள்கைகளின் உண்மை உயர்வுகளையோ மக்களிற் பெரும்பாலோர் உணர முடியாமற் போயிற்று. சமயத்தைப்பின்பற்றுவோரிற் பெரும்பாலோர் கல்வியறிவில்லா மூடர்களாகவும், கருத்தறிந்து எதையும் செய்வது என்னும் போக்கே இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களை அந் நெறியிற் போக்குபவர்களும் பெரும்[illegible]லும் வெறும் வெளி வே[illegible]தாரிக்கயவர்களாய்க் காணப்ப[illegible]கின்றனர். இந் நிலைகளா[illegible] சமயத்துறையையே இருள் கவி[illegible] கொண்டது.

நிற்க, இக் காலம், மகி[illegible] தக்க வகையில் அ[illegible] வளர்ச்சியும், ஆராய்ச்சித் தன்[illegible] யும், உரிமை உணர்ச்சியும், [illegible] டுப்பற்றும், மொழிப்பற்[illegible] சீர்திருத்த நோக்க[illegible] கொண்ட இளைஞர்கள் வி[illegible] டெழுந்து கொண்டிருக்[illegible] காலமாக மாறி இருக்கிறது.

ஆனால், எழுகின்ற இ[illegible] கள் இந் நாட்டின் பண்[illegible] உயர் நிலையையும் இன்[illegible] இழி நிலையையும் கண்டு, [illegible] நிலைக்குக் காரணம் சமய[illegible] எனப் பிறழ உணர்ந்து, அ[illegible] முன்னைய நன்னிலையையும், பி[illegible]ன்னைய சீர் கெட்ட தன்மையையும் பிரித்தறிந்து சீர்திருத்த முற்படாமல் ஆத்திரம் கொண்டு சீறத் தொடங்கி விட்டனர்.

நாட்டின் அரசியல் பொருளாதார நிலைகளும், வெளிக்குத் தெரியாமலும் தெரிந்தும் பல துறையிலும் செயல் முகப்பட்டு வரும் வகுப்பு வாதப் போக்கும், உரிமை கிடைத்த பின்னரும் நாட்டு மொழியின் மதிப்பு எத்துறையிலும் அதிகார அடிப்படை

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

ில் உயராத, உயர முடியாத நிழல்களும், சமயத்தின் பெய ாலும் கடவுளின் பெயராலும் டக்கும் சாதி வேற்று மைக்கொடுமைகளும், அட்டூழி ங்களும் அவர்கள் ஆத்திரத் துக்கு எரியிடும் நெய்யாயின.

இந் நிலையில், அவர்கள், நூல் ளில் கூறப்படும் உண்மைச் மய வாழ்க்கையின் உயர்வுக் நம், நடைமுறையிலுள்ள ோலிச் சமயச் சழக்கிற்கும் ுள்ள வேறுபாட்டைக்கண்டுணு ும் பொறுமை கொள்ளாமற் ோவதும், முன்னதற்குப் பின் ாது முழு மாறாக இருக்க, மூத் ுதே போலும் எனத் தவறாக ண்ணிச்சமய நூல்களை நுனித் ுணர்ந்து கல்லாமலே கண்டிக்க ுற்பட்டு விடுவதும் இயல்பாய் ிட்டது.

இனி, எழுச்சி பெற்றுள்ள இளைஞர்களின் போக்குக்கு மாசு கற்பிப்பதைவிட அவர்களுடைய ஆத்திரத்துக்கும், எதிர்ப்புக்கும் அடிப்படைக்காரணங்கள் எவை என்று ஆராய்ந்தறிந்து அவற்றை நீக்கி உண்மைச் சமய வளர்ச் சிக்கு அடிகோலி அவர்களையும் அந்நெறிப்படுத்தச் சமயத் தலை வர்கள் முன்வந்து முயன்றிருக்க வேண்டும். அவ்வாறு தக்கபடி எவரும் முன் வரவில்லை.

நாட்டு மக்களும், அவர்களிற் பெரும்பாலோர் எழுத்தறிவில் லாதவர்களாகவும், உள்ளவர்க ளிலும் பலர் மிகச் சாதாரண மான பொதுக் கல்வியே பெற்ற வர்களாகவும் இருப்பதால், ஆத்தி ரங் கொண்ட தமிழிளைஞர்களின் உணர்ச்சிப்பேச்சுக்களை உண்மை யோடு ஒத்ததெனு மயங்கித்தம் சமய ஒழுக்கங்களைக் கைவிட்டு வருகின்றனர். சீர்திருத்த இளை ஞர்கள் இந் நாட்டில் பலதுறை யிலும் குறிப்பாகச் சமயத்துறை யிலும் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கின்றனர் என்றே சொல்லலாம். என்று ஆம் சமயத்தலைவர்களும் நிலை யங்களும் இன்னுங்கூட விழித் தெழுந்து தம் கடமைகளைத் தக்கபடி செய்ய முனையவில்லை.

திருவருளால், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்துக்குப் புதிதாகப்பட்டத்துக்கு வந்துள்ள சிவத்திரு. அருணாசல தேசிக பர மாசாரிய சுவாமிகளும் அவர்களை அடுத்து, மதுரை திருஞானசம் பந்தர் ஆதீன இளவரசு பட்டத் துக்கு வந்துள்ள திருவருள் தவ யோக சோம சுந்தர தேசிக பரமா சாரியசுவாமிகளும் சிலகாலமாகத் தமிழ்ச் சான்றோர்கள் இளைஞர் களின் உள்ளங்களை உணர்ந்து அவற்றை (பிரதிபலிக்கிற முறை யில்) வாங்கிச் செயலாற்றத் தொடங்கி இருக்கின்றனர்.

குன்றக்குடி அடிகளார் அருள் நெறித் திருக்கூட்டம் என்னும் அமைப்பைத் தொடங்கி, அதற்கு அரசியல் அமைப்புகளைப்போல ஆங்காங்குக் கிளை நிலையங்கள் அமைக்கச் செய்து, சமய உண் மைகளைப் பரப்பியும், ஐயங்களைப் போக்கியும், சமய நிலையங்களைத் திருத்தியும் இருளைநீக்க முற்பட் டிருக்கிறார்கள். மதுரை அடிக ளார் அவர்களும் அவ்வாறே திருவருள் தவ நெறி மன்றம் என்னும் அமைப்பைத் தொடங் கிக் கிறித்தவ பௌத்த இராம கிருஷ்ண மடங் (Mission) களைப் போல் மக்களுக்குக்கல்வி மருத் துவம் முதலிய நலங்களைக் கொடுத்துச் சமய உணர்ச்சியைப் பெருக்கவும், அத் துறையில் முறையாகப் பயில விழைவார்க்கு வசதிகள் செய்யவும் முயன்று வருகிறார்கள்.

இவ்விரு பெருந்தலைவர்களின் எழுச்சியும் முயற்சியும் இருள் பட்ர்ந்த சமயத்துறைக்கு ஒளி காட்டித் தமிழ்ச் சான்றோர்களை யும் இளைஞர்களையும் நம்பிக்கை கொடுத்து மகிழ்விக்கின்றன.

தமிழகத்திலுள்ள ஏனைய சம யத் தலைவர்களும் இவர்களைப்பின் பற்றிப் பொது மக்களோடு தொடர்பு கொண்டு சமயப்பணி செய்யத் தலைப்படுதல் வேண்டும்.

இப்பெரியோர்களின் முயற்சி திருவருளால் வெற்றி பெற்றுத் தமிழ் மொழியும் பண் பாடும் தழைக்கும் நிலையில் சமயமும் அதன் நிலையங்களும் திருந்தி உயருமாக!

—ந ரா ஆட்லரசு.

—*—

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட் ... லகுறாகக்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பணமுதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

(5-ம் ப...

கொண்டு சென்று உண்டான். உண்டவன் அப்படியே அங்கு உறங்கிவிட்டான்.

இரவும் கடந்து, பொழுதும் புலர்ந்தது. இவன் எழுந்தான். அவ்வாறு இவன் எழுந்து நிற்கவும் காலைப் பூசையை முடித்துக் கொண்டு குருக்கள் வெளிவரவும் சரியாக இருந்தது. இவனைக் கண்டதும் குருக்கள் இவனிடம் சிறிது திருநீறு கொடுத்துவிட்டு வெளியேறினர். வாங்கிய நீறை வாயில் சிறிது இட்டு மிகுந்ததை நெற்றியில் பூசினான்.

நிமிடங்கள் 'மணிக்கணக்காயின.' சூரியன் உச்சிக்கு வந்தான். இவன், எங்கெங்கே தன் கால் சென்றதோ அங்கெல்லாம் சுற்றிவிட்டு ஒரு வீட்டின் வாயிலில் வந்து நின்றான். அது ஒரு சாதாரண வீடல்ல, அது ஒரு மந்திரியின் அரண்மனையாகும். அவ்வரண்மனையின் வேலைக்காரனொருவன் வீட்டின் பாட்டில் வ நிற்கக் கூடாதெனப் பிடித்துத் தள்ளினான். என்றாலும் மறுபடியும் அவ்வரண்மனையின் வாயிலிலே சென்று நின்றான். வீட்டினுள்ளிருந்த வேறு ஒரு வேலைக்காரன் வந்து தன் கைத்தடியால் அவன் மண்டையில் அடித்தான். அடிபட்டு அவன் கீழே விழவும் அரசர் வீட்டிலிருந்து மந்திரி வரவும் சரியாக இருந்தது. இரத்தம் சொள சொளவென ஒழுகுவதைக் கண்ட மந்திரி அவன் மேல் இரக்கப்பட்டு வைத்தியரை அப்போதே அழைத்துத் தக்க சிகிச்சை செய்யுமாறு கூறினர்.

நாட்கள் மாதங்களாயின. மண்டை அடியும் மறைந்தது. நல்லுணவும் வேண்டிய வசதிகளும் மந்திரி அவனுக்கு அளித்தான். இதைக்கண்ட நடராசன் மனம் பூரித்தது. அவன் கடைசியாக தேக வலிமையோடும், நல்லறிவோடும் விளங்க ஆரம்பித்தான்.

நிகழ்ந்தன யாவும் உணர்ந்த அவன், ஒரு நாள் மந்திரியிடம் சென்று, அவர் காட்டிய இரக்கத்திற்கும், நல்லுதவிகளைச் செய்ததமைக்கும், அன்புக்கும் நன்றி கூறித் தான் செல்லவிடை தருமாறு பணிவுடன் வேண்டினான்.

மந்திரி அவன் அறிவுத்திறனையும், உடல் வனப்பையும் கண்டு உளம் மகிழ்ந்தானல்லது விடை தந்தாரில்லை. இங்கேயே இன்னும் சில மாதங்கள் தங்கிப் பின்பு செல்லுமாறு கூறினர். ஆனால் அவன் மறுக்கவே கடைசியில் பொற்காசுகள் பல தந்து அனுப்பினர்.

தான் கோயிலில் திருநீறு பூசியதையும், அதுமுதல் இன்றுவரை நன்னிலையை அடைந்திருப்பதையும், எண்ண எண்ண அவன் மனம் அளவிலாப் பூரிப்பு எய்த, ஆனந்தக் கண்ணீர் விடலானான். இறைவன் செயலே செயலென்றும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதையும் நினைக்க நினைக்க இறைவன் பால் மாறா அன்பு உண்டாயிற்று.

தினம் கோயிலுக்குச் செல்வதையும், ஏழை எளியவர்கட்குப் பெருந் தொண்டு இயற்றுவதையும் நடராசன் வழக்கமாகக் கொண்டான். தொண்டு செய்து அதனால் ஒவ்வொருவரும் மகிழ்வெய்துவதைக் கண்டு, அவன் மனம் மற்றெல்லாரையும் விட இன்பப் பட்டது.

இவன் கொண்டு செய்வதுமன்றி இரவில் கோவிலுக்குச் சென்று வழிபாடு முடித்ததும் மந்திரியின் அரண்மனையைச் சுற்றிச் சுற்றிக் காவல் புரி வந்தான்.

ஒருநாள் நடு இரவி போது ஒருவன் அரண்மனை குள் புகச்சுவர்ஏறிக் குதித்தா அப்பொழுது அவனிடமிரு ஒரு காகிதம் கீழே விழுவதை கண்டான். ஏறிக் குதிக்கு பொழுது அவனைப் பிடிக்க வந்தான் நடராசன். ஆ காகிதம் ஒன்று விழவே, என் விஷயம் அதில் உளது என் அறிந்தபின்பிடிக்கவிரும்பிச்ச நின்று அவன் உள்ளே இற விட்டதை அறிந்தும் அக் தத்தை எடுத்துப் பிரித்தா அதில் 'மந்திரியைக் கொன் தலையைக் கொணர்பவனுக் பரிசு ரூ. 10,000' என் இருந்தது. நடராசன் இ கண்டதும் அவன் மேல் வில்லாக் கோபம் கொண் அவனைப் பிடித்து வெளிய கொண்டுவந்து நன்றாக உதைத்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டான்.

மறுநாள் அரச சபை கூடிய போது நடராசன் அவனை உள்ளே கொண்டு சென்று, அரசன் முன் நிறுத்தி, அவன் வந்த காரணத்தைக் கூறி, தக்கதைச் செய்யவேண்டுமெனப் பணிவுடன் வேண்டி நின்றான்.

அரசன் அவன் செய்ததோர் ஒப்பற்ற உதவியை நினைந்து பரிசுகள் பலவழங்கி அனுப்பினான்.

மந்திரி அவன் செய்த ஓர் நற்செயலைக் கண்டு தன் வீட்டிலேயே இருக்குமாறு பணித்தார்.

'நடராசன் எல்லார்க்கும் நல்லவனே நல்லவெலாம் செய வல்லவனே' இவ்வினிய குரல் அவ்வரண்மனை முழுதும் ஒலித்தது.

—மணி.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அ